**<u>O.S. 6/2019, 30.03.2022, 12.15 pm - 12. 25 pm</u>**

**வா.சா.3, ஜெகநாதன், த/பெ.பீமகவுண்டர், வயது 52**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு, தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

என்னுடைய சொந்த ஊர் எது வென்றால் வளையாம்பட்டு ஆகும். நான் தற்பொழுது நேதாஜி நகரில் குடியிருக்கிறேனா என்றால் இல்லை வளையாம்பட்டில் இருக்கிறேன். வழக்கு சொத்து ஆதியில் வாதியுடைய மூப்பாட்டனாருக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன், மூப்பாட்டானர் பெயர் தெரியாது. வாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று என்கு தெரியாது என்று சொன்னால் முதியோர் சொத்து ஆகும். யார் தாவா சொத்தை ஆதியில் கிரையம் வாங்கியது என்றால் தெரியாது. எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் தந்தையின் இரண்டாவது மனைவி எப்பொழுது இறந்தார் என்று தேதி வருடம் தெரியுமா என்றால் தெரியாது. 30 வருடத்திற்கு முன்பாக பாகம் பிரிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் யார் யாருக்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்து வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பட்டா தனிப்பட்ட முறையில் வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன், அந்த பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. முனிசாமி இறந்த பிறகு அவருடைய மனைவிக்கு பட்டா வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன், அந்த பட்டா எண் மற்றும் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது, படவேட்டம்மாள் பெயரில் பட்டா உள்ளது மட்டும் தெரியும். வழக்கு சொத்து வாதி மற்றும் பிரதிவாதிக்கு கூட்டாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன், அடங்கல் ஏதேனும் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த அடங்கலை எப்பொழுது, எங்கு பார்த்தேன் என்றால் வாதி காண்பித்தார், ஆனால், அதில் என்ன சர்வே எண், எந்த வருடத்திற்கானது, யார் வழங்கினார்கள், எவ்வளவு விஸ்தீரணம் என்ற எந்த விவரமும் தெரியாது. தானியங்களை பிரித்து கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள், நான் ஏதேனும் பிரித்து கொடுத்தேனா என்றால் இல்லை. அறுவடை காலத்தில் நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். 1997ல் அப்பொழுது நெல் பயிர் வைத்திருந்தார்கள், எந்த சர்வே எண்ணில் என்று தெரியாது. யார், யார் எவ்வளவு பங்கு போட்டு பிரித்து எடுத்துக்கொண்டார்கள் என்றால் அந்த விவரம் தெரியாது. 28.11.1994 கிரையம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன், அந்த கிரையம் எந்த சர்வே எண்ணிற்கு யாருக்கு ஏற்படுத்தியது என்று சொன்னால் சர்வே எண் தெரியாது, 1ம் பிரதிவாதியான கோவிந்தன், 3ம் பிரதிவாதியான சாமுவிற்கு எழுதிகொடுத்தாகும். சார்பதிவாளர் அலுவலகத்தில் தேடி பார்த்தாக குறிப்பிட்டுள்ளேன், அது எப்பொழுது என்றால் 2014ம் வருடம் தேதி தெரியாது. 1998ல் பரிவர்த்தனை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன், அதில் யார் யார் எந்த சொத்திற்கு செய்துகொண்டார்கள் என்றால் எந்த சொத்து என்றால் தெரியாது, 2ம் பிரதிவாதி மாணிக்கமும், 3ம் பிரதிவாதி சாமுவும் ஏற்படுத்தி கொண்டார்கள். 2016ல் 3ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக குறிப்பிட்டுள்ளேன், அந்த பத்திரத்தில் எந்த சர்வே எண், எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது, அதில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை. 1994, 1998 மற்றும் 2016 ஆவணத்தை நான் நேரடியாக பார்த்ததில்லை என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் இடையே இந்த நீதிமன்றத்தில் வழி சம்மந்தமாக ஒரு

வழக்கு உள்ளது, அதில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மாணிக்கம் எனக்கு சகலை என்றால் சரிதான். எனவே, தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், என்னுடைய சகலைக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:-** இல்லை.